# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:21** **தேதி:-27.02.2015**

# BSNLஐ காக்க பாராளுமன்றம் நோக்கிய பேரணி

அன்பார்ந்த தோழர்களே,

நமது அகில இந்திய FORUM எடுத்த முடிவின் அடிப்படையில் 25.02.2015 அன்று பாராளுமன்றத்தை நோக்கிய ஒரு பிரமாண்டமான பேரணி நடைபெற்றது. தமிழகத்தில் இருந்து 125க்கும் மேற்பட்ட தோழர்களும், அகில இந்திய அளவில் 5000க்கும் மேற்பட்ட தோழர்களும் கலந்துக் கொண்ட மிக பிரமாண்டமான பேரணி இந்திய நாட்டின் தலைநகரான புதுடெல்லியில் நடைபெற்றது.

எந்த ஒரு பொருளாதார கோரிக்கைகளையும் முன் வைக்காமல், இந்திய நாட்டின் மக்கள் சொத்தான BSNLஐ பாதுகாக்க வேண்டும் என்கின்ற ஒற்றை லட்சியத்தை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கோடு குமரி முதல் இமயம் வரை உள்ள BSNLல் பணியாற்றும் ஊழியர்களும், அதிகாரிகளும் கலந்துக் கொண்ட இந்த பேரணி, 25.02.2015 அன்று காலை 11 மணியளவில் ஜன்பத்தில் உள்ள BSNL தலைமையகத்தின் முன் இருந்து துவங்கியது.

FORUMன் தலைவர் தோழர் C.C.சிங், அமைப்பாளர் தோழர் V.A.N.நம்பூதிரி, நமது BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் இதர சங்கங்களின் பொது செயலாளர்கள் முன் வரிசையில் அணி வகுத்து இந்த பேரணிக்கு தலைமை தாங்கி கம்பீரமாக நடைபோட்டனர். அனைத்து மாநிலங்களின் தோழர்களும் தங்களின் பதாகையை உயர்த்தி பிடித்து BSNLஐ பாதுகாக்கும் முழக்கங்களை எழுப்பிய வண்ணம் அவர்களை பின் தொடர்ந்தனர். BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளரும், தமிழ் மாநில தலைவருமான தோழர் S.செல்லப்பா, மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் உள்ளிட்ட தலைவர்கள் தலைமை தாங்க தமிழக தோழர்கள் பீடு நடைபோட்டு பேரணியில் பங்கேற்றனர். நமது மாநில உதவி செயலாளர் தோழர் P.இந்திரா மற்றும் மாநில அமைப்பு செயலாளர் தோழர் M.மல்லிகா ஆகியோர் தலைமையில் பங்கேற்ற 10க்கும் மேற்பட்ட பெண் தோழர்களும் BSNLஐ பாதுகாக்கும் முழக்கங்களை உள்ளடக்கிய அங்கியை (Apron) அணிந்துக் கொண்டு முன்வரிசையில் சென்றது பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது. தமிழகத்தின் சார்பில் 125க்கும் மேற்பட்ட தோழர்கள், அரசின் பொதுத்துறை விரோத கொள்கைகளுக்கு எதிரான முழக்கங்களோடு பேரணியில் பங்கேற்றனர். தமிழக FORUMன் தலைவர் தோழர் R.பட்டாபிராமன், NFTE சங்கத்தின் அகில இந்திய தலைவர்களில் ஒருவரான தோழர் S.S.கோபாலகிருஷ்ணன், தோழர் S.சிவகுமார் CS AIBSNLEA மற்றும் SNEA சார்பாக அகில இந்திய சங்க நிர்வாகிகள் தோழர் ராஜன், தோழர் O.முத்து உள்ளிட்ட பல தோழர்களும் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

இந்த கொள்கை முழக்க பேரணியினை டெல்லி காவல் துறையினர் ஜந்தர் மந்தர் என்ற இடத்தில் நிறுத்தினர். அந்த இடத்தில் மிக பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. FORUMன் தலைவர் தோழர் C.C.சிங் அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இந்தக் கூட்டத்தில் FORUMன் அமைப்பாளர் தோழர் V.A.N.நம்பூதிரி, நமது BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் NFTE, SNEA, AIBSNLEA, BTEU, BSNL MS, SNATTA, AIGETOA மற்றும் BTU ஆகிய சங்கங்களின் பொது செயலாளர்களும் கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள். மேலும் CITU சங்கத்தின் பொது செயலாளர் தோழர் தபன் சென் MP, BMS சங்கத்தின் பொது செயலாளர் தோழர் ப்ரிஜேஸ் உபாத்யாயா, AITUC சங்கத்தின் செயலாளர் தோழர் அமர்ஜித் கவுர், AIRF சங்கத்தின் பொது செயலாளர் தோழர் ஷிவ் கோபால் மிஸ்ரா, ஆம் ஆத்மி கட்சியின் பாட்டியாலா தொகுதி MP திரு தரம் வீர் காந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியில் FORUMன் அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி, தலைவர் தோழர் C.C.சிங், தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் K.செபாஸ்டியன் GS SNEA மற்றும் தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகிய FORUMன் தலைவர்கள், இந்திய நாடு முழுவதும் இருந்து பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட லட்சக்கணக்கான கையெழுத்துக்கள் (இதில் நமது தமிழகத்தில் இருந்து பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட 4,35,272 கையெழுத்துக்களும் அடங்கும்) அடங்கிய மனுவை பிரதம மந்திரி அலுவலகத்திற்கு நேரடியாக சென்று ஒப்படைத்தனர்.

இந்த பேரணி மத்திய அரசாங்கத்திற்கும், நமது BSNL நிர்வாகத்திற்கும் விடப்பட்ட எச்சரிக்கையாகும். நமது நியாயமான கோரிக்கையான BSNL நிறுவனத்தை புத்தாக்கம் செய்வதற்கு நேர்மையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை எனில் இந்திய நாடு முழுவதும் மார்ச் 17 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம் கடுமையாக நடைபெறும் என அவர்களுக்கு உணர்த்தும் வகையில் நடைபெற்றுள்ளது.

இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்த மத்திய தலைமைக்கும், நாடு முழுவதும் இருந்து கலந்துக் கொண்ட தோழர்களுக்கும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. இந்திய நாட்டின் தென்கோடியான தமிழகத்தில் இருந்து பெருந்தொலைவு பயணம் செய்து இந்த பேரணியில் பங்கேற்ற பெண்கள் உள்ளிட்ட அனைத்து தோழர்களுக்கும், அதற்கான ஏற்பாடுகளை செய்த மாவட்ட/மாநில தலைவர்களுக்கும் தமிழ் மாநில சங்கம் தனது சிறப்பான பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**